1993 ஏப்ரல் 2]

மாண்புமிகு திரு. சே. ரகுபதி, தொழிலாளர் நலத்துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) சுமார் 130 தொழிலாளர்கள் பணி புரிந்த ஒசூர் யுனி ரப்பர் அண்ட் ஃபுட்வேர் லிமிடெட் நிறுவனம் 1978-79 ல் ஆரம்பிக்கப்பட்டு, முக்கியமாக 'ஹவாய்' காலனி களை உற்பத்தி செய்து வந்தது. பொருளாதார நெருக்கடி யினால் நிறுவனம் 6—7—1990 தேதி முதல் மூடப்பட்டது. அந்த நிறுவனத்திற்குப் பண உதவி புரிந்த தமிழ்நாடு இண்டஸ்ட் ரியல் இன்வெஸ்ட்மெண்ட் கார்ப்பரேஷன் இந்த நிர்வாகத்தைத் தனக்குச் சேரவேண்டிய பணத்திற்கு ஈடாக 19—11—1990 அன்று எடுத்துக்கொண்டது. இந்த நிறுவனம் மூடியது தொடர் பாக தொழிலாளர் ஆணையர் முன்பு தொழிற் தகராறுச் சட்டப் பிரிவு 25-0ன் கீழ் ஜனவரி, 1991-ல் அனுமதி கோரி நிர்வாகம் தாக்கல் செய்த விண்ணப்பத்தின்மீது ஆணையர் உரிய விசாரணை மேற்கொண்டு 7—3—1991 அன்று நிறு வனத்தை மூடுவதற்கான அனுமதி வழங்கியுள்ளார். இது ஒரு (Defacto Closure) ஆகும்.

2. மேலும் இந்த நிறுவனத்தில் இயங்கி வந்த அண்ணா பொது ஊழியர் சங்கத்திற்கும், இந்த நிறுவனத்திற்கும் இடையே கிருஷ்ணகிரி தொழிலாளர் அலுவலர் முன்னிலையில் 6—4—1992 அன்று தொழிற் தகராறுச் சட்டப் பிரிவு 12 (3)ன் கீழ் ஒரு ஒப்பந்தம் ஏற்பட்டு அதன் மூலமாக தொழிலாளர் களுக்குச் சேரவேண்டிய சட்டபூர்வமான சலுகைகளை அளிக்க ஒப்புக் கொள்ளப்பட்டது. இந்த ஒப்பந்தப்படி மூடுதல் ஏற்கப் பட்டதாலும், தொழிலாளர்களுக்குச் சேரவேண்டிய தொகை பற்றி ஒப்பந்தம் ஒன்றும் ஏற்பட்டுள்ளதாலும் இப்பிரச்சினை இறுதியாக முடிக்கப்பட்டது.

முற்பகல் 11-10

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: வினாக்கள்— விடைகள் நேரம் முடிவுற்றது.

குறிப்பு—ஓர் உரையின்தொடக்கத்தில் (*) உடுக்குறி இடப்பெற்றி ருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என் பதைக் குறிக்கும்).

2. உரிமைப் பிரச்சினை

பேரவைத் தலைவர் மீது தீர்மானம் கொண்டுவரப்பட்டிருப்ப தாகப் பத்திரிகைகள் செய்தி வெளியிட்டுள்ளது குறித்து.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: அவை உரிமைமீறல் பிரச்சினை. மாண்புமிகு உறுப்பினர் திரு. டி. எம். ரங்கராஜன் அவர்கள் மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் மீது

[பேரவைத் துணைத் தலைவர்] [1993 ஏப்ரல் 2

ஒரு உரிமை மீறல் பிரச்சினைக்கான அறிவிப்புக் கொடுத்துள்ளார். மாண்புமிகு பேரவைத் தலைவர் தொடர்பான பிரச்சினையாக இருப்பதால், பேரவையில் இந்தப் பிரச்சினையை எடுத்துக் கொள்ளுமாறு மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் என்னைப் பணித்திருக்கிறார்கள். இது எவ்வாறு உரிமைப் பிரச்சினையில் அடங்கும் என்பதை மிகச் சுருக்கமாக விளக்க வேண்டும். திரு. டி. எம். ரங்கராஜன்.

திரு. எஸ். திருநாவுக்கரசு : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பாயின்ட் ஆஃப் ஆர்டர்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : உரிமைப் பிரச்சினை முடிந்த பிறகு பேசுங்கள். (you will be given a chance (குறுக்கீடு) அவை உரிமை மீறல் பிரச்சினைக்குத்தான் முன்னுரிமை தரவேண்டும் என்று இருக்கிறது. சரி. பாயின்ட் ஆஃப் ஆர்டர் என்ன?

திரு. எஸ். திருநாவுக்கரசு : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, **(குறுக்கீடுகள்)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : (It is not point of order) உட்காருங்கள். திரு. திருநாவுக்கரசு அவர்கள் அமர வேண்டும். இது பாயின்ட் ஆஃப் ஆர்டர் அல்ல. நீங்கள் அமரலாம். திரு. ரங்கராஜன் அவர்களுக்கு அனுமதி அளிக்கப்பட்டிருக்கிறது. இது எவ்வாறு உரிமைப் பிரச்சினையில் அடங்கும் என்பதை இந்த அவைக்குத் தெரிவிக்குமாறு அவருக்கு அனுமதி வழங்கப்படுகிறது.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, உறுப்பினர் திருநாவுக்கரசு அவர்கள் சொன்னபோது அது பாயின்ட் ஆஃப் ஆர்டர் இல்லை என்று சொல்லிவிட்டீர்கள். ஆனால் பாயின்ட் ஆஃப் ஆர்டர் இல்லை என்று சொன்னால் மட்டும் போதுமா? அல்லது அவர் கேட்டதை அவைக் குறிப்பிலிருந்து நீக்கலாமா என்று கேட்க விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : அது அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது.

** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

1993 ஏப்ரல் 2]

*திரு. டி. எம். ரங்கராஜன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இன்றைக்குக் காலையிலே அநேகமாக எல்லா பத்திரிகைகளிலும் சபாநாயகர் மீது நம்பிக்கை இல்லை என்று 40 எம். எல். ஏக்கள் கையெழுத்திட்டு ஒரு தீர்மானத்தை (குறுக்கீடு) தாக்கீது செய்திருப்பதாக செய்திகள் வெளிவந்திருக்கின்றன. இந்தப் பெரும்பாலான பத்திரிகைகளிலே இந்தச் செய்தி யாரால் கொடுக்கப்பட்டது என்று அறிவிக்கப்படவில்லை. ஆனால் இன்றைய நாளிட்ட தினகரன் பத்திரிகையில் மட்டும் இந்த தீர்மானத்தைப் பற்றிச் சொல்லப்பட்டிருப்பதோடு இந்த அறிக்கையை கொடுத்திருப்பது மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவர் எஸ். ஆர். பாலசுப்பிரமணியன் அவர்கள் தெரிவித்தார்கள் என்று சொல்லப்பட்டிருக்கிறது. மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நம்முடைய பேரவையை ரெகுலேட் செய்வது நம்முடைய அசெம்பிளி ரூல்ஸ். இந்த அசம்பிளி ரூல்ஸ் எல்லாம் நம்முடைய கான்ஸ்டிடியூஷன் ஆர்ட்டிகிள் 208-ன்கீழ் ஃப்ரேம் செய்யப்பட்ட ஒன்றாகும். இந்த ரூலின்படி அதாவது ரூல் 36 (5)-ன்படி பேரவைக்கு எந்த நோட்டீஸ் கொடுக்கப்பட்டாலும், எந்த அறிக்கை கொடுக்கப்பட்டாலும் அந்த நோட்டீஸ்கள் குறிப்பாக சட்டமன்ற உறுப்பினர்களுக்கு அதனுடைய காப்பியை கொடுக்காமல் வெளியிலே ஒருவருக்கும் சொல்லக் கூடாது என்று இருக்கிறது.

Rule 36 (5)-A Notice shall not be given publicity by any Member or any other person until it has been admited by the speaker and circulaicd to the members.

என்று இருக்கிறது. ஆனால் இங்கே வந்திருக்கின்ற செய்தி ஏதோ நம்முடைய மாண்புமிகு சபாநாயகர் மீது ஒரு தீர்மானம் கொண்டு வந்திருப்பதாகச் சொல்லப்பட்டு இன்றைக்கு பத்திரிகைகளில் எல்லாம் வந்திருப்பது என்னுடைய உரிமையை மட்டும் அல்லாமல் இங்கே இருக்கின்ற அனைத்து உறுப்பினர்களுடைய உரிமையையும் மீறுகின்ற செயலாக இருப்பதால் நான் இந்த உரிமை மீறல் பிரச்சினையைக் கொண்டு வந்திருக்கிறேன். ஆகவே மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, இதன் மீது தக்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று தங்களிடம் வேண்டி விரும்பிக் கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : இது இன்னொரு உறுப்பினர் குறித்த உரிமை மீறல பரச்சினையாக இருப்பதால் அவருடைய கருத்தைச் சொல்வதற்கும் வாய்ப்பு அளிக்கப்படுகிறது. மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவர்.

திரு. எஸ். ஆர். பாலசுப்ரமணியன் : மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, பேரவைத் தலைவரை தலைவர் பதவியிலிருந்து நீக்க வேண்டும் என்று நோட்டீஸ் கொடுத்திருப்ப

தாகப் பத்திரிகையாளர்களுக்கு மட்டுமல்ல, நான் யாருக்கும் வெளியே தெரிவிக்கவில்லை. எனவே இதிலே உரிமை மீறல் எதுவும் கிடையாது. இப்போது மீண்டும் ஆணித்தரமாகச் சொல்கிறேன்.

I have not made it public and I will not make it public. It was not from me. The news has appeard in most of the papers. I know. But I do not know the source. I have not made it public. There is no breach of privilege involved in this matter.

முற்பகல் 11-15

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : இது பற்றிய விவரத்தை நான் பேரவைச் செயலாளரிடம் கேட்டு அறிந்தேன். 1—4—1993 அன்று 3 அறிவிப்புகளை மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் உட்பட மற்றும் காங்கிரஸ் கட்சி யைச் சேர்ந்த வெவ்வேறு சட்டமன்ற உறுப்பினர்கள் செய லாளரிடம் கொடுத்து இருக்கிறார்கள். இந்த அறிவிபபுகள் அனைத்துமே பேரவை விதி 68இன்படி அமையாத காரணத் தால் அந்த அறிவிப்புகளைத் தொடர்புடைய உறுப்பினர் களுக்குத் திருப்பி அனுப்பி இருப்பதாகப் பேரவைச் செயலாளர் அவர்கள் தெரிவித்தார்கள். நிலைமை இப்படி இருக்க, இந்த அறிவிப்புக் குறித்த செய்தி எல்லாப் பத்திரிகைகளிலும் வந்துள்ளது. ஒரு குறிப்பிட்ட பத்திரிகையில் மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவர் பெயருடன் வந்துள்ளது என்பதை இங்கே தெரிவித்து இருக்கிறார்கள். இது பேரவை விதி 36 (5)'ஐ மீறியதாக அமைகிறது. மேலெழுந்தவாரியாகப் பார்க்கிறபோது இதிலே அவை உரிமை மீறல் இருக்கிறது என்று கருத இடமிருக் கிறது. ஆனால் இங்கே எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் பேசு கிறபோது தான் பத்திரிகைகளுக்குக் கொடுக்கவில்லை என்று சொல்லியிருக்கிறார்கள். இருந்தாலும் இந்தப் பிரச்சினை தொடர்பாக அந்தப் பத்திரிகையாளரையும் அழைத்து விசாரிக்க வேண்டிய சூழ்நிலை ஏற்படும் என்பதால் இதை மேலெழுந்த வாரியாகப் பார்க்கும்போது இதில் உரிமை மீறல் இருப்பதாகக் கருதி இந்தப் பிரச்சினையை ஆய்ந்து அவைக்கு அறிக்கைஅளிக்க இந்தப் பிரச்சினை உரிமைக் குழுவுக்கு அனுப்பப்படுகிறது.

திரு. எஸ். ஆர். பாலசுப்ரமணியன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் இல்லை என்று சொன்ன தற்குப் பின்னால் இந்த அவைக்கு உள்ளே நுழைவதற்கு சில நிமிடங்களுக்கு முன்னால்தான் அந்த நோட்டீஸ் எனக்குக் கிடைத்தது. நான் தெளிவாகச் சொல்லியிருக்கிறேன்; மீண்டும் சொல்கிறேன், நான் எந்தப் பத்திரிகையாளரிடத்திலும் சொல்ல வில்லை என்று நான் சொல்லிவிட்ட பிறகு உங்களுக்குச் சந்தேகம் இருக்குமானால் அதை உரிமை மீறல் குழுவுக்கு

1993 ஏப்ரல் 2] [திரு. எஸ்.ஆர். பாலசுப்ரமணியன்]

அனுப்புவதற்கு முன்னால் அழைத்து விசாரிக்கலாம் அல்லது கடிதம் மூலம் கேட்கலாமே தவிர அவை உரிமை மீறல் குழுவுக்கு அனுப்புகிறேன் என்று சொல்லுவது முறையாக இருக்காது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு அவை முன்னவர்.

*மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. ரங்கராஜன் அவர்கள் மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் மீது உரிமைப் பிரச்சினை என்று கொண்டு வந்து பேசினார்கள். மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் இதை நான் கொடுக்கவில்லை, பத்திரிகைகளுக்கு நேரடியாகத் தர வில்லை என்று சொல்லிவிட்டார்கள். ஆகவே, அவர்கள் அப்படி சொன்னதற்குப் பிறகு பத்திரிகைகள் எப்படி போட்டன, எப்படி பத்திரிகைகளில் வந்தது என்பதைத்தாங்கள் விசாரித்து அதற்குப் பிறகு யார் மீது உரிமைப் பிரச்சினை கொண்டு வரவேண்டுமென்று முடிவு எடுப்பது நல்லது. ஆகவே, மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் மறுத்துவிட்டார், நான் கொடுக்கவில்லை என்று. ஆக இந்த பத்திரிகையில் வந்திருப்பதற்கு என்ன காரணம்? யார் காரணம் என்பதை விசாரித்து அதற்குப் பிறகு அதில் உரிமை மீறல் எப்படி இருக்கிறது, யார் மீது தொடுக்கலாம் என்பதைத் தாங்கள் முடிவு செய்யலாம்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு அவை முன்னவர் அவர்களின் ஆலோசனைக்கு ஏற்ப பத்திரிகை யாளர்களை அழைத்து விசாரித்து அதன் அடிப்படையிலே மேல் நடவடிக்கை தொடரலாம் என்று கருதுவதால் பத்திரி கையாளர்களை விசாரிப்பதற்கான ஏற்பாடுகளைப் பேரவைத் தலைவர் அலுவலகம் செய்யும் என்பதைத் தெரிவித்துக் கொள் கிறேன்.

TRUTH ALONE TRIUMPHS

3. எஞ்சிய கூட்ட நாட்களுக்குப் பேரவைப் பணிகளினின்று சில உறுப்பினர்கள் தள்ளிவைக்கப்பட்டிருப்பதை மறு பரிசீலனை செய்ய வேண்டுமென்ற கோரிக்கை.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு எதிர்க் தலைவர்.

திரு. எஸ். ஆர். பாலசுப்ரமணியன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பேரவை விதி 120-ன் கீழ் பேரவை யின் இந்த சட்டமன்றக் கூட்டத் தொடர் முழுவதும் கலந்து கொள்ளக்கூடாது. என்று மாண்புமிகு உறுப்பினர்கள் திரு. சி. ஞானசேகரன். திரு. ப. ரங்கநாதன், ஜனதாதள் உறுப்